## வாக்குறுதிகள் நிறைவேறுகின்றன;

# அறிவிப்புகள் செயலாக்கம் பெறுகின்றன!

## கல்லூரிகள், மருத்துவமனைகள், உழவர் அங்காடிகளை

## திறந்து வைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

சென்னை, பிப். 18 -

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'திராவிட மாடல்' ஆட்சியில் வாக்குறுதிகள் நிறைவேறுகின்றன; அறிவிப்புகள் செயலாக்கம் பெறுகின்றன. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தலைமைச் செயலகத்தில் கல்லூரிகள், மருத்துவமனைகள், உழவர் அங்காடிகளைத் திறந்து வைத்தார்.**

**முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் வேளாண்மை - உழவர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, உயர்கல்வித்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் 1210.52 கோடி ரூபாய் செலவிலான கட்டடங்களை திறந்து வைத்து, 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, 43 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்புக்கூட்டு மையங்களுக்கான மானியம் மற்றும் வேளாண் இயந்திரங்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.**

இது பற்றிய விவரம் வருமாறு :-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.02.2026) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் 542.02 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், பணிமனை கட்டடங்கள், மகளிர் விடுதிக் கட்டடம், திறன்மிகு மையங்கள் போன்ற பல்வேறு கல்விசார் கட்டடங்களை திறந்து வைத்தார். மேலும், 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், பல்நோக்கு அரங்குகள், விடுதிகள் மற்றும் இதர கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப் படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயில "தமிழ்ப்புதல்வன்" ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல், அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கையில் 7.5 விழுக்காடு முன்னுரிமையின் அடிப்படையில் இடஒதுக்கீடு, முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

**திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்!**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் ஒரு புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி; இராணிப்பேட்டை மாவட்டம் - மேல்வெங்கடாபுரம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - திருக்கோவிலூர், சென்னை மாவட்டம் - திருவொற்றியூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 42 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்கள்;

தருமபுரி மாவட்டம் - செட்டிக்கரை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் - துவாக்குடி, சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி, தேனி மாவட்டம் - வீரபாண்டி, மதுரை மாவட்டம் - செக்கானூரணி, கோயம்புத்தூர் மாவட்டம் - தொண்டாமுத்தூர், திருவண்ணாமலை மாவட்டம் - தென்னாங்கூர், செங்கல்பட்டு மாவட்டம் - பெரும்பாக்கம், சேலம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு கல்லூரிகளில் 45 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 34 வகுப்பறைகள் 19 ஆய்வகங்கள், பணிமனை, மகளிர் விடுதி மற்றும் இதர கட்டடங்கள்;

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள ஐந்து அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளில் 255 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 திறன்மிகு மையங்கள்;

அரசு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்காக, 198.84 கோடி ரூபாய் செலவில் கற்றல் மேலாண்மை அமைப்புடன் ஒருங்கிணைந்த நிறுவன வள மேலாண்மைக்கான மென்பொருள்;

என மொத்தம் 542.02 கோடி ரூபாய் செலவிலான உயர்கல்வித்துறை சார்ந்த 15 கட்டடங்களை திறந்து வைத்து, ஒருங்கிணைந்த நிறுவன வள மேலாண்மைக்கான மென்பொருளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்**

கரூர் மாவட்டம் - அரவக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் - துறையூர், ஈரோடு மாவட்டம் - அந்தியூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் - உளுந்தூர் பேட்டை, திண்டுக்கல் மாவட்டம் நத்தம், திருவாரூர் மாவட்டம் - கூத்தாநல்லூர், பெரம்பலூர் மாவட்டம் - கொளக்காநத்தம், தஞ்சாவூர் மாவட்டம் - திருவிடைமருதூர், சிவகங்கை மாவட்டம் - மானாமதுரை, கடலூர் மாவட்டம் - பண்ருட்டி ஆகிய இடங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 180 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடங்கள்;

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி, செங்கிபட்டி, திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடி, கடலூர் மாவட்டம் - சிதம்பரம், திட்டக்குடி, கடலூர், கோயம்புத்தூர் மாவட்டம் - மேட்டுப்பாளையம், ஈரோடு மாவட்டம் - திட்டமலை, ஈரோடு, தூத்துக்குடி மாவட்டம் - கோவில்பட்டி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டம் - நாகர்கோவில், கன்னியாகுமரி, தென்காசி மாவட்டம் - கடையநல்லூர், விருதுநகர் மாவட்டம் - சிவகாசி, திண்டுக்கல் மாவட்டம் - நிலக்கோட்டை, சென்னை - நந்தனம், மாநிலக் கல்லூரி, தரமணி, இராமநாதபுரம் மாவட்டம் - பரமக்குடி, நீலகிரி மாவட்டம் - உதகமண்டலம், செங்கல்பட்டு மாவட்டம் - பெரும்பாக்கம், குரோம்பேட்டை, நாமக்கல் மாவட்டம் - இராசிபுரம், நாமக்கல், தர்மபுரி மாவட்டம் - அரூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - லால்குடி, சேதுராபட்டி, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி, தேனி மாவட்டம் - போடிநாயக்கனூர், கிருஷ்ணகிரி மாவட்டம் - பர்கூர், திருப்பத்தூர் மாவட்டம் - ஜோலார்பேட்டை, அரியலூர் மாவட்டம் - கீழப்பழுவூர், அரியலூர், மயிலாடுதுறை - சேலம் - கரூர் - வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு கல்லூரிகளில் 375 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 437 வகுப்பறைகள், 19 பல்நோக்கு அரங்குகள், விடுதிகள் மற்றும் இதர கட்டடங்கள்;

என மொத்தம் 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள உயர்கல்வித் துறை கட்டடங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் அவர்கள் நேற்று வேளாண்மை - உழவர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, உயர்கல்வித் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் 1210.52 கோடி ரூபாய் செலவிலான கட்டடங்களை திறந்து வைத்து, 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, 43 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்புக்கூட்டு மையங்களுக்கான மானியம் மற்றும் வேளாண் இயந்திரங்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் முனைவர் ச.விசாகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.02.2026) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் 542.02 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், பணிமனை கட்டடங்கள், மகளிர் விடுதிக் கட்டடம், திறன்மிகு மையங்கள் போன்ற பல்வேறு கல்விசார் கட்டடங்களை திறந்து வைத்தார். மேலும், 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், பல்நோக்கு அரங்குகள், விடுதிகள் மற்றும் இதர கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ. வேலு, முனைவர் கோவி. செழியன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 16 உழவர் அங்காடிகள் திறப்பு!

## 23 வேளாண் - உழவர் நலத்துறை கட்டடங்கள் திறப்பு!

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.02.2026) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பில் விவசாயிகள் விளைவிக்கும் வேளாண் பொருட்களை நகர்ப்புர நுகர்வோரிடம் கொண்டு சேர்க்கும் வகையில் முதற்கட்டமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 2 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 16 உழவர் அங்காடிகளை தொடங்கி வைத்து, 53 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள், 6 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், 2 விதை சேமிப்பு கிடங்குகள், 4 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 100 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட ஒரு குளிர் பதனக்கிடங்கு, 2 ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத்துறை வளாகங்கள், தோட்டக்கலைப் பட்டயப்படிப்பு மாணவர் விடுதி, வேளாண்மைப் பொறியியல் துறை விரிவாக்க மையம் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், 100 மதிப்புக்கூட்டும் மையங்கள் அமைக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக 54 தொழில் முனைவோர்களுக்கு மதிப்புக்கூட்டும் மையங்கள் அமைக்க ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கி, வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர வாடகை சேவையினை வலுப்படுத்த கொள்முதல் செய்யப்பட்ட 672 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

**16 உழவர் அங்காடிகளை திறந்து வைத்தல்**

விவசாயிகள் விளைவிக்கும் வேளாண் பொருட்களை நகர்ப்புர நுகர்வோரிடம் கொண்டு சேர்க்கும் வகையில் 100 உழவர் அங்காடிகள் அமைக்கப்படும் என 2024-25 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதன் முதற்கட்டமாக, உழவர்கள் வளம் பெறுவதுடன் நுகர்வோர்களின் நலமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயர் சிந்தனையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் 2 கோடியே 06 இலட்சம் ரூபாய் செலவில் 11 உழவர் அங்காடிகள் மற்றும் 5 நடமாடும் உழவர் அங்காடிகள் மூலம் விவசாயிகளின் காய்கறிகள், பழங்கள், பாரம்பரிய அரிசி, சிறுதானியங்கள், பால் பொருட்கள், பனைப் பொருட்கள், பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை செய்ய ஏதுவாக மொத்தம் 16 உழவர் அங்காடிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**திறந்து வைக்கப்பட்ட புதிய வேளாண் கட்டடங்களின் விவரங்கள்!**

இராணிப்பேட்டை மாவட்டம் - திமிரி, தென்காசி மாவட்டம் - வாசுதேவநல்லூர், நாமக்கல் மாவட்டம் மோகனூர், புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் - கிருஷ்ணகிரி மற்றும் வேப்பனப்பள்ளி ஆகிய இடங்களில் 17 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள்;

தேனி மாவட்டம் - கோட்டூர் மற்றும் சங்கராபுரம், மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூர், நாகப்பட்டினம் மாவட்டம் கணபதிபுரம், திருப்பூர் மாவட்டம் - குளத்துப்பாளையம் மற்றும் பள்ளப்பாளையம் ஆகிய இடங்களில் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள்;

மயிலாடுதுறை மாவட்டம் - வைத்தீஸ்வரன் கோவில், கன்னியாகுமரி மாவட்டம் - திருப்பதிசாரம் ஆகிய இடங்களில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் தலா 250 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 விதை சேமிப்புக்கிடங்குகள்;

நாகப்பட்டினம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் 5 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் தலா ஒரு ஒருங்கிணைந்த விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர் மச்சான்றளிப்பு வளாகம்;

கடலூர் மாவட்டம் - வேப்பூரில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு கூடுதல் கட்டமைப்பு, சேலம் மாவட்டம் காடையாம்பட்டி, நாமக்கல் மாவட்டம் - இராசிபுரம் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் 18 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் - தொண்டா முத்தூரில் 92 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 100 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு, திண்டுக்கல் மாவட்டம் - ரெட்டியார் சத்திரத்தில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தோட்டக்கலை பட்டயப்படிப்பு கல்லூரி மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம், அரியலூரில் 1 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைப் பொறியியல் துறை விரிவாக்க மையம்;

என மொத்தம் 53 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 23 வேளாண் - உழவர் நலத்துறை கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**100 மதிப்புக்கூட்டும் மையங்கள் அமைக்கும் திட்டத்தை தொடங்கி வைத்தல்**

2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலமாக தமிழ்நாட்டை மாற்ற வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு பார்வையின் ஒரு பகுதியாக '100 மதிப்புக்கூட்டும் மையங்கள்' அமைக்கும் திட்டம் 202526 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில் 25 முதல் 35 சதவீதம் வரை முதலீட்டு மானியமும், அதிகபட்சமாக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியமும் வழங்கப்படுகிறது. இவை தவிர, 5 ஆண்டுகளுக்கு 5 சதவீத வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. கூடுதலாக வேளாண் கட்டமைப்பு நிதி திட்டத்தில் 3 சதவீத வட்டி மானியமும் பெறலாம்.

இத்திட்டத்தில் தக்காளி, மிளகாய், சின்ன வெங்காயம், முருங்கை, மஞ்சள், வாழை, மா, பலா, தென்னை, மல்லிகை, சிறுதானியங்கள், பாரம்பரிய அரிசி உள்ளிட்ட பல்வேறு வேளாண் விளைபொருட்களுக்குத் தகுந்த மதிப்புக்கூட்டுதல் மையங்கள் அமைக்க மானியமாக தமிழ்நாடு அரசால் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 54 தொழில் முனைவோர்களுக்கு மதிப்புக்கூட்டும் மையங்கள் அமைத்திட மானியமாக 30 கோடியே 42 இலட்சம் ரூபாய்க்கான ஒப்புதல் ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர வாடகை சேவையினை வலுப்படுத்தி தொடங்கி வைத்தல்**

வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இயந்திர வாடகை சேவையினை வலுப்படுத்த 13 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கொள்முதல் செய்யப்பட்ட 10 டிராக்டர்கள், சுழற்கலப்பைகள், நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள், சட்டிக் கலப்பைகள், 11 சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்கள் போன்ற இணைப்புக்கருவிகள் உட்பட 672 இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகளின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில் முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்கள் நேற்று வேளாண்மை - உழவர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, உயர்கல்வித் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் 1210.52 கோடி ரூபாய் செலவிலான கட்டடங்களை திறந்து வைத்து, 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, 43 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்புக்கூட்டு மையங்களுக்கான மானியம் மற்றும் வேளாண் இயந்திரங்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் முனைவர் இரா. முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.